


– வாழ்வோம்

புதையல் 6

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...

‘வள்ளுவர் தபால்தலை’, தி.மு.க. செய்த சாதனை!


மாலைமணி 21-2-60
வள்ளுவர் தபால் தலை! தி. மு. க. செய்த சாதனை!

விடுதலை பெற்று பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு, உலகப் பெரும் புலவர் திருவள்ளுவரின் திருவுருவப்படம் தபால்தலைகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது! இதற்காக, இந்திய சர்க்காரையும் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றிகண்ட தலைவர்களையும் நாம் மனப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்!

திருவள்ளுவரின் அருமை பெருமைகளைப் பற்றி, வடவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்! ஆனால், தென்னவர்களுக்கு அந்த பொய்யாமொழிப் புலவரைப் பற்றி, அந்தப் பொய்யாமொழிப் புலவர் படைத்த உலகப் பெருநூல் திருக்குறளைப் பற்றி தெரியாமலிருக்க முடியாது!

திருவள்ளுவர் ஆஸ்திகரா? நாஸ்திகரா? தெரியாது - சொல்லவும் முடியாது! திருவள்ளுவர் சைவரா? வைணவரா? - தெரியாது; தெரிந்துகொள்ளவும் முடியாது!

திருவள்ளுவர் கண்ட கடவுள் எது? நமக்குக் காட்டிய கடவுள்தான் எது? யாமறியோம், யாமறியோம்!

திருவள்ளுவர் ஒரு சாதிக்குச் சொந்தமானவரல்ல. ஒரு மதத்திற்குச் சொந்தமானவரல்ல. எந்தக் கடவுளுக்கும் உரிமையான வரல்ல!

திருவள்ளுவர் ஹிந்துக்கும் சொந்தம். முஸ்லிம்களுக்கும் சொந்தம். கிறிஸ்தவர்களுக்கும் சொந்தம். நாஸ்திகர்களுக்கும் சொந்தம். ஆஸ்திகர்களுக்கும் சொந்தம்! எல்லா நாட்டினருக்கும் சொந்தம்!

அவர் படைத்த நூலில் எல்லாமிருக்கிறது. இல்லாதது ஒன்றுமே இல்லை.

அவர் காட்டிய பாதையில் நடந்தால் குடி இருக்காது, கூத்தி இருக்காது, சூது இருக்காது, வஞ்சமிருக்காது - பொய் இருக்காது, களவு இருக்காது - பொறாமை இருக்காது, பொச்செறிப்பு இருக்காது, ஆண்மையற்ற தன்மையுமிருக்காது, அடிமை என்ற நிலையிருக்காது!

இத்தகைய பெருமை படைத்த பேரறிஞரைப் பாராட்ட பதின்மூன்று ஆண்டுகள் பிடித்திருக்கின்றன! காரணமென்ன? வடக்கு, தெற்கு என்ற பேதம்தானே? திருவள்ளுவர், தமிழர். தென்னகத்தில் பிறந்தவர் என்ற காரணம்தானே?

வடவர்கள்மீது மட்டும் நாம் குற்றம் சாட்டிப் பயன் இல்லை! தமிழர்களுக்கும் இந்தக் குற்றச்சாட்டில் பெரும் பங்குண்டு!

ஒரு பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தமிழர்களுக்கே திருவள்ளுவரைத் தெரியாது, திருக்குறளும் புரியாது! ஏன், இப்போதுகூட படிக்காத பாமர மக்களில் பலருக்கு திருவள்ளுவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை!

துளசிதாசரைத் தெரிந்திருக்கும் தமிழர்களைவிட, பக்த மீராவை அறிந்திருக்கிற தமிழர்களைவிட, ராமனையும் கிருஷ்ணனையும் தெரிந்திருக்கிற தமிழர்களைவிட, திருவள்ளுவரை அறிந்திருக்கிற தமிழர்களின் தொகை குறைவு, மிக மிகக் குறைவுதான்!

பாரதம் படித்தவர்களின் தொகை இங்கே அதிகமுண்டு, இராமாயணம் படித்தவர்களின் எண்ணிக்கை இங்கே ஏராளம் உண்டு! திருக்குறளைப் படித்தவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டே எண்ணிவிடலாம்!

இந்த நிலை மாறியதற்கு யார் காரணம்? ‘கால மாற்றம் தான் காரணம்’ என்பார்கள். உழைப்புக்கு மதிப்பு தராத உலுத்தர்கள், சிலர்! திராவிட முன்னேற்றக் கழகம் திருவள்ளுவரைக் காட்டிய பிறகுதான், திராவிட முன்னேற்றக் கழகம் திருக்குறளைக் கையிலெடுத்துக் கொடுத்த பிறகுதான் - மக்கள் மத்தியில் திருவள்ளுவர் பாராட்டப்படுகிறார்! இந்த உண்மையை நேர்மையானவர்கள் எவருமே மறுக்க முடியாது!

இன்றைய தினம், வள்ளுவரின் உருவப்படம் தபால்தலையில் பொறிக்கப்பட்டதற்கே நாம்தான் காரணம் என்றால், அதுவும் தற்பெருமையாகாது!

பல ஆண்டுகளாக மேடைகளிலே, மாநாடுகளிலே மக்கள் மத்தியிலே விடுத்த கோரிக்கைதான், இன்று செயல் வடிவமாகி இருக்கிறது. நம்மைப் பற்றி புரிந்தவர்கள், நம் வலிவைப் பற்றித் தெரிந்தவர்கள், நம்மோடு பல காலம் இருந்தவர்கள் இந்திய சர்க்காருடன் போராடி, இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றனர்! அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்!

தமிழகத்தில் பிறந்து உலகப் புகழ் பெற்ற திருக்குறளை, காலம் தாழ்த்திப் பாராட்டினபோதிலும், இப்போதாவது நம்மை ‘அடிமைகள்தானே’ என்று ஒதுக்கித் தள்ளிவிடாமல், ஓரளவு நமக்கு மதிப்பளிக்க முன்வந்த இந்திய சர்க்காரை மீண்டும் ஒரு முறை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்!

தமிழர்கள் இனியாவது திருவள்ளுவரை அறிந்து, திருக்குறளைத் தெரிந்து பயன்பெற முன்வர வேண்டும்!

திருவள்ளுவரின் உருவத்தைத் தபால்தலையில் பொறித்துவிட்டால் மட்டும் போதாது, அவர் காட்டிய வழியில் ஆட்சி செய்ய வேண்டும்! இந்த வகையில், திருவள்ளுவரின் தபால்தலை பயன்படட்டும்!

(‘மாலைமணி தலையங்கம் 21.2.1960)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் கலைஞர் 06



நெருக்கடி நிலை காலத்தில் கருத்துரிமைக்காகத் தன்னந்தனியாக கலைஞர் நடத்திய அந்தப் போராட்டம் வரலாற்றில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு..

■ எழுத்து: **மகிழவன்,**
ஏ.ஐ. உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்

நீதி கேட்டு நெடிய பயணத்தில்...



1982 - ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், திருச்செந்தூர் அறநிலையத் துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை கொலையைக் கண்டித்து, மதுரையில் இருந்து நீதி கேட்டு நெடிய பயணம் மேற்கொண்டார். அதற்கு முதல் நாள், மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் சோசலிஸ்ட் வழக்கறிஞர்கள் சங்கம் நடத்திய கூட்டத்தில் பங்கேற்றார். அந்தக் கூட்டத்துக்கு, பகுத்தறிவாளர் பேரவை பொறுப்பாளராக இருந்த என் தந்தையார் மீனாட்சிசுந்தரம் அவர்கள், 14 வயதான என்னையும் என் தம்பியையும் அழைத்துச்சென்றார். இந்தப் படத்தில் முத்தமிழறிஞருக்குப் பின்புறம் நின்றுகொண்டிருக்கிறேன். அருகில் நிற்பது, என் தம்பி. அடுத்த நாள், தலைவருடன் நீதி கேட்டு நெடிய பயணத்தில் கலந்துகொண்டோம். இந்தப் புகைப்படமும் நினைவுகளும் வாழ்நாளில் மறக்க முடியாதது.


மீ.அண்ணாதுரை

– **மீ.அண்ணாதுரை,**
திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம், மதுரை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1977

கறுப்புக்கொடி உயரட்டும்!

-ஆம் ஆண்டு அக்டோபர் 29, 30 ஆகிய தேதிகளில், தமிழ்நாடு வருகைதந்த இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தை அறிவித்தது கழகம். `நெருக்கடி நிலைப் பிரகடனம், கருத்துரிமை மறுப்பு, தமிழ்நாட்டில் கழக அரசைக் கலைத்தது, கழகத்தின்மீது சுமத்தப்பட்ட அவதூறுகள் ஆகியவற்றைக் கண்டித்து, இந்திரா காந்தி செல்லும் இடமெல்லாம் கருங்கடலில் அலைகள் போல கறுப்புக்கொடிகள் ஓங்கி உயரட்டும்' என அறைகூவல் விடுத்தார் கலைஞர். இந்தப் போராட்டத்தின்போது தடியடித் தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டன. கலைஞர், பேராசிரியர் உள்ளிட்ட தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900